REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 26உ வியாழன் (9—6—55) ★ ★ வெளியூர்: வைகாசி 26உ வெள்ளி (10—6—55) [இதழ் 307

### வந்துகொண்டே இருக்கிறது—ஆனாலும் வரவில்லை?

"வருகிற ஆகஸ்டு திங்களில் நடைபெறவிருக்கும் சென்னை சட்டசபைக் கூட்டத்தின்போது நிலச் சீர்திருத்தம் சம்பந்தமான மசோதா கொண்டுவரப்பட்டுவிடுமா என்பது தற்போதுள்ள சூழ்நிலையைக் கவனிக்கும்போது சந்தேகம் தருவதாகவே இருந்து வருகிறது.

"முதலில், ஆகஸ்டு மாதத்திலேயே அந்த மசோதா கொண்டுவரப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், மசோதா அதற்குள்ளாகத் தயாராகிவிடுமோ என்பதுதான் சந்தேகமாக இருப்பதுபோல் தோன்றுகிறது", என்று நிதியமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

# சிறையில் நிறைய இடம் இருக்கிறதாம்!

## மக்களாட்சி முறையை மறந்து முதலமைச்சர் மிரட்டுகிறார்

### மொழி மாநிலக் கிளர்ச்சிக்கு கிராம மக்களின் ஆதரவில்லையென தனக்குத்தானே சமாதானம்

சாந்திகார், ஜூன் 6—

"அகாலி தளத்தவர் தங்களின் 'சட்ட விரோதமான நடவடிக்கைகளை' எத்தனை நாட்கள் நீடித்தாலும், பஞ்சாப் சர்க்கார், தொடர்ந்து அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுவர்,"

என்று பஞ்சாப் மாநில முதன் மந்திரி பீம்சேன் சச்சார் வீராப்புப் பேசியிருக்கிறாராம்.

"அவர்களால் எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் செல்லட்டும்; நமது சிறைகளில் ஏராளமான இடம் இருக்கிறது; ஆனால் நாம், சட்ட விரோத நடவடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியாது," என்றும் அவர் கூறியுள்ளாராம்.

"நகர்ப்புறத்தில்மட்டுமே அகாலி தளத்தவரின் கிளர்ச்சி நடைபெறுகிறது. அந்தக் கிளர்ச்சிக்கு கிராமாந்திரங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

### நிலப்பிரபுக்களின் 'போர்க்கோலம்' பரவுகிறது!

#### மொத்தம் 109 பேர் கைது

ஜெய்ப்பூர், ஜூன் 9—

இராஜஸ்தான் மாநில சர்க்கார் காரியாலயத்தின் முன்னர், சுமார் 2000 ஜாகீர்தார்கள் மீண்டும் நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர். அவர்களது ஆர்ப்பாட்டம் கட்டுக்கடங்காது போய்விடவே போலீசார் லேசான தடியடிப் பிரயோகம் செய்து அவர்களைக் கலைத்திருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களையொட்டி, இதுவரையிலும் மொத்தம் 109 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(முன்னர் வந்த செய்திகளை 3-ம் பக்கம் பார்க்கவும்)

## 'விடுதலைக் கிளர்ச்சியைக் கருவறுக்க'

★

### 'தீவிர ஏற்பாடுகள்' நடைபெறுகின்றனவாம்!

#### 14 நீக்ரோ போர்வீரர்கள் கைது செய்யப்பட்டதன் மர்மம்?

கோவா விடுதலை இயக்கத்தை ஒடுக்க தீவிரமான நடவடிக்கைகளையும் ஏற்பாடுகளையும் போர்ச்சுகீசிய சர்க்கார் மேற்கொண்டு வருவதாகத் தெரிகிறது.

தீவிர ஏற்பாடுகளில் ஒன்றாகத் துருப்புகள் நடமாட்டத்திற்கென புதிய பாதைகள் அமைக்கப்படுவதாகவும் பழைய பாதைகள் மறுபடியும் செப்பனிடப்படுவதாகவும் தெரிய வருகிறது.

அண்மையில் போர்ச்சுகீசிய சர்க்கார் 14 நீக்ரோ சோல்ஜர்களை கைது செய்துள்ளனர்.

### 'தாக்குதலை சமாளிக்க பலாத்காரம் மேற்கொள்ளப்படும்'

#### இந்தியப் பேரரசிற்கு போர்ச்சுகல் சர்க்காரின் அச்சுறுத்தல்!

இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசிய பகுதிகளின்மீது நடத்தப்படும் 'தாக்குதல்'களை போர்ச்சுகீசிய சர்க்கார், இனி 'பலாத்காரம்' கொண்டு எதிர்ப்பார்கள் என்று லிஸ்பன் சர்க்கார் வெளிவிவகார இலாகா இந்தியாவிற்கு அனுப்பியுள்ள குறிப்பு ஒன்று கூறுகிறதாம்.

சட்ட விரோதமாக நுழைவது, போர்ச்சுகீசிய எல்லைச் சுதந்திரத்தை மீறிய குற்றமெனக் கொண்டு தீவிரமாக தடுக்கப்படும் என்றும் அந்தக் குறிப்பில் காணப்படுகிறதாம்.

"எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைவதின் விளைவுகளுக்கு இந்திய அரசாங்கமே முழுப் பொறுப்பும், ஏற்க வேண்டும்; முழுவதும் இந்தியாவின் தவறினால், இப்போதுள்ள நெருக்கடி நிலை முற்றுமானால் ஆசியாவின் அமைதிக்கே ஆபத்து ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புவதாகவும் அந்தக் குறிப்பு தெரிவிக்கிறதாம்.

## அவசியமிருந்தால் செய்வார்களாம்!

### நெல் விலை வீழ்ச்சி பற்றி இந்தியப் பேரரசின் தட்டிக்கழிக்கும் போக்கு

சென்னை, ஜூன் 8—

தானியங்களின் விலை வீழ்ச்சியைத் தடுக்கும் கொள்கைகளை 'அவசியமிருந்தால்' அடுத்த அறுவடை காலத்தில் அமுலுக்குக் கொண்டுவர இந்திய சர்க்கார் நிர்மாணித்திருப்பதாக மத்திய உணவு, விவசாய இலாகா அமைச்சர் அஜித் பிரசாத் ஜெயின் அறிவித்திருக்கிறாராம்.

"தற்போதைய உணவுப் பொருட்களின் விலைகள் உற்பத்தியாளர்களுக்கும், வாங்குவோருக்கும் நியாயமானதாகவே இருக்கிறது," என்றார்.

மேலும் அவர், விவசாயிகள்—உபயோகிப்போர் ஆகிய இரு சாராரின் நலன்களையும் கவனிக்க வேண்டும் என்றும், விலைகள் அதிகமாகக் குறைந்துவிட்டால் விவசாயிகளுக்கு உற்பத்தியில் அதிகக் கவனம் இல்லாமற்போய்விடுமாகையால் நாம் நடுநிலைமையான தோர் வழியையே பின்பற்ற வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

### கலந்து கொள்ளாதே!

காங்கிரசின் ஆதரவில் நடத்தப்பெறும் இளைஞர் நிறுவனங்களைத் தவிர மற்ற இளைஞர் நிறுவனங்களின் நடவடிக்கைகளில் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன் காங்கிரஸ்காரர்களைக் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

#### 'சில நிபந்தனை'களுடன் அழைப்பை ஏற்றார்?

மாஸ்கோவிற்கு வரும்படி சோவியத் சர்க்கார் விடுத்த அழைப்பை மேற்கு ஜெர்மன் பிரதமர் அடினார் சில நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொண்டுள்ளாராம்.

அவர் குறிப்பிட்டுள்ள அந்த நிபந்தனைகள் என்ன என்பது பற்றிய எதுவும் அறிவிக்கப்படவில்லை.

எப்படியும் இந்த அழைப்பை இறுதியாக ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்னர், மேற்கத்திய தேச நாடுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று அடினார் சொல்லக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்!

### பிற்பட்ட வகுப்பினர் குழு அறிக்கை

#### சிபாரிசுகளை ஏற்றால் ஏராளமான பணம் செலவாகுமாம்!

சென்ற மார்ச்சு திங்களில் பிற்பட்ட வகுப்பினர் குழு சமர்ப்பித்த அறிக்கை பற்றி, மாநில சர்க்கார்கள் கருத்தை அறிந்து கொண்ட பின்னரே இந்திய சர்க்கார் அது பற்றி முடிவு செய்யுமாம்.

பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு அதிகப்படியான கல்வி வசதிகளும், சர்க்கார் ஊழியங்களில் அதிகப்படியான பிரதிநிதித்துவங்களும் அளிக்கப்பட வேண்டுமென்று அக்குழு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சில குறிப்பிட்ட வகுப்பை பிற்பட்ட வகுப்புடன் இணைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளதாம்.

இந்தக் குழு செய்துள்ள மேற்கண்ட சிபாரிசுகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு நடத்துவதாக இருந்தால், ஏராளமான பணம் செலவழிக்க நேரிடும் என்று கூறப்படுகிறதாம்.

## 'பார்ப்பனர்கள் மீது மற்றவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்!'

### 'பார்ப்பனர்கள்தான் அதை அகற்ற முன்வர வேண்டும்'

### 'அவர்கள் நன்மைக்காகவே இவ்வறிவுரையைக் கூறுகிறேன்!'

### தஞ்சை மாவட்ட கலெக்டரின் 'குலப்பற்று!'

அய்யம்பேட்டை, ஜூன் 5—

"பார்ப்பன சமூகத்தின்மீது மற்ற சில சமூகத்தினர் அதிருப்தி கொண்டுள்ளனர். மற்ற சமூகத்தினரை அன்புடன் நேசித்து, அவர்களின் நலன்களுக்குப் பாடுபட பார்ப்பனர்கள் முன்வருவதுதான், அந்த அதிருப்தியைப் போக்குவதற்குரிய சிறந்த வழியாகும். அதனால் பகையும் பொறாமையும் மறைந்தொழியும்."

"கிராம மக்களுக்குப் பணி புரிவதின் மூலம் அவர்களின் அன்பைப் பெறுவதை, தங்களுடைய குறிக்கோளாகப் பார்ப்பனர்கள் கொள்ளவேண்டும். பார்ப்பனர்களின் நலங் கருதியே இந்த உபதேசத்தை நான் அவர்களுக்குக் கூறுகிறேன்"

—என்று, தஞ்சை மாவட்ட கலெக்டர் இராமகிருஷ்ணன் (ஐ. சி. எஸ்.) அவர்கள், கணபதி அக்ரகாரம் பள்ளி பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

"அரசாங்கத்திற்கும், நாட்டு மக்களுக்கும் நம்பிக்கையாக சேவை செய்துள்ள சிறந்த பல எஞ்சினீயர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் பிறப்பிடமாகக் கணபதி அக்கிரகாரம் இருந்து வந்திருக்கிறது. தேசிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எந்தவிதமான பயன் தரும் பணியையும் இக்கிராமம் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை; இக்கிராமத்துக்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தைப் பயன்படுத்திக்கொள்ள கிராமத்தவர் முன்வரவேண்டும்; தவறிவிடும் பட்சத்தில், அத்தொகை வேறு கிராமங்களில் செலவழிக்கப்பட்டுவிடும் என்பதை இக்கிராம மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்," எனவும் கலெக்டர் மேலும் கூறினார்.

1954-ம் ஆண்டில், சிந்திரி ரசாயன உர உற்பத்திச்சாலையிலிருந்து நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மொத்தம் 3,10 604 டன் அமோனியம் சல்பேட் உரம் ஏற்றி அனுப்பப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை-17/55

## வ. ஆ. மாவட்டக் கிளைக் கூட்டம்

★

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகக் கிளைக் கூட்டம் பொதுச் செயலாளர் தலைமையில் 26—6—55 ஞாயிறன்று பிற்பகல் 2-30 மணிக்கு, வேலூர் டவுன் ஹாலில் நடைபெறும்.

மாவட்டப் பிரதிநிதிகளுக்கு அனுமதிச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப்படும்.

அதுபோது, வ. ஆ. மாவட்டக் கிளை பற்றிய பல்வேறு பிரச்சினைகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

"அறிவகம்," சென்னை 9—6—1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—6—'55 வியாழன்

# எத்தனை நாளைக்கு இந்த மோகம்?

பம்பாய், பஞ்சாப், உத்திர பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், இராஜஸ்தான், பெப்சு, மத்திய பாரத், விந்திய பிரதேசம், போபால் முதலிய வடநாட்டு மாநிலங்களில் உற்பத்தியாகும் பயிறு வகைகளின் விலைவாசிகள், மற்ற கோதுமை போன்ற விவசாயப் பொருள்களின் விலையைப்போலவே வீழ்ந்துவருகின்றன.

வட நாட்டில், விலை சரிந்து வரும் கோதுமையை மணங்கு ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் கொள்முதல் செய்து, அந்தக் கோதுமை உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகளும், இதரர்களும் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகாத வகையில், இந்தியப் பேரரசு ஏற்கனவே தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

இப்போது விலை சரிந்து வரும் கொள், கடலை, உளுந்துப் பயிறு போன்ற பயிறு வகைகளையும் மணங்கு ஒன்றுக்கு 6 ரூபாய் வீதம் கொள்முதல் செய்து, வடநாட்டு மக்கள் நஷ்டப்படாதவாறு பார்த்துக்கொள்ள இந்தியப் பேரரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

வட நாட்டில் விவசாயப் பொருள்களின் விலைகள் சரிந்து வந்தபோது, தென்னாட்டிலும்—குறிப்பாக சென்னையிலும் விவசாயப் பொருள்களின் விலை—குறிப்பாக நெல் விலை, நீர் வீழ்ச்சியின் வேகத்தில் சரியத்தான் செய்தது.

ஆனால், வீழ்ந்துவந்த நெல் விலையைச் சரிக்கட்டி, சென்னை மாநில விவசாயிகள் நஷ்டமடையாதிருக்க இந்தியப் பேரரசோ, சென்னை அரசாங்கமோ நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

இந்தியப் பேரரசு, தென்னாட்டு விவசாயிகள் துயர் துடைப்பதில் அக்கரை காட்டாதது நமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை; ஏனெனில், 'தென்னாட்டவர் நலன்களில் அக்கரை காட்டத் தேவையில்லை,' என்பதை, இந்தியப் பேரரசு தனது வழக்கமான போக்காகக் கொண்டிருக்கிறது என்பதை, நாடும் அறியும், நாமும் நன்கறிவோம்.

கவலைப்பட வேண்டியவர்கள் என்று யாராவது சிலராவேனும் கருதப்படுகிற சென்னை மாநில சர்க்காரோ, உதகமண்டல குளிர்வாசத்தை உல்லாசமாக அனுபவித்துக்கொண்டு, 'விலை வீழ்ச்சி பற்றிக் கவலைப்படாதீர்,' என்ற உபதேசத்தைமட்டுமே தந்தனர்.

பயிறு வகைகள் பெரும்பாலும் உற்பத்தியாவது, நாம் மேலே குறிப்பிட்ட வடநாட்டு மாநிலங்களில்தான். அங்கு, 'அந்தப் பொருள்களின் விலை வீழ்கிறது,' என்றவுடன், அந்தந்த மாநில சர்க்கார் காட்டும் அக்கரையை விட, முன்னதாகவே இந்தியப் பேரரசு ஓடிச்சென்று, விவசாயிகளுக்கு நஷ்டம் வராமல் பாதுகாப்புத் தேடித் தருகிறது.

ஆனால், அதே இந்தியப் பேரரசு, சில மாதங்களுக்கு முன்பு சென்னையில் சரியத் தொடங்கிய நெல் விலை பற்றி வாயே திறக்கவில்லை.

இந்தியப் பேரரசின் இந்தப் போக்கிற்கு, 'வடநாடு வேறு—தென்னாடு வேறு; வடநாட்டு மக்கள்தான் நம்மவர்—தென்னாட்டு மக்கள், மாற்றார்; நம் மக்கள் நலன்தானே முக்கியம் — அவர்கள் நலன் பற்றி நமக்கேன் அக்கரை; வடநாடு சுதந்திர நாடு—தென்னாடு அந்த வடநாட்டிற்குச் 'சுதந்திர' முத்திரையுடன் கிடைத்திருக்கும் சுரண்டல் பூமி—அடிமைக்காடு—சந்தைக் கடை,' என்று, இந்தியப் பேரரசு கொண்டிருக்கும் ஏகாதிபத்திய எண்ணம்தான் என்று நாம் கூறி வருகிறோம். 'இல்லை' என்போர், இந்தியப் பேரரசின் இந்த மாற்றாந்தாய் மனப்போக்கிற்கு வேறு என்ன 'தத்துவ விளக்கம்' தருகிறார்கள் என்பதையாவது மக்கள் தெரிந்துகொள்ள விரும்புவது இயற்கையே!

இந்தியப் பேரரசிற்கு அவர்களின் இந்த மாற்றாந்தாய் மனப்போக்கை இடித்துரைக்க வேண்டிய பொறுப்பும், கடமையுமுள்ள சென்னை சர்க்காரும், வேறு பல பிரச்சினைகளைப் போன்றே இந்தப் பிரச்சினையிலும், அவர்களுடன் 'கூடிக் குலவு'வதில் — அவர்களுக்குத் தலையாட்டுவதில் காலத்தைச் செலவிட்டு வருகின்றனர்.

"இடித்துரைத்தால், எங்கே அவர்கள் பார்த்துத் தந்திருக்கிற பதவிப் பிச்சையைப் பிடுங்கிக்கொள்வார்களோ?"—என்ற அச்சம்தான் சென்னை சர்க்காரின் தலையாட்டிப் போக்கிற்குக் காரணமாக இருக்க முடியும்.

'மக்கள் நலன் எவ்வாறுபினும் கவலை இல்லை—நமக்கு நம் பதவியே பெரிது!' என்றெண்ணிய அதிகார மோகிகள் பெற்ற பரிதாபகரமான கதியை—சென்னை சர்க்காரின் இந்தப் போக்கை கவனித்து வரும் திராவிடர்கள் தெரிந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

"என்ன செய்வது? 'ஏக இந்தியா' மோகம் அவர்களை இப்படி நடந்து கொள்ளச் சொல்லுகிறது போலும்!" என்று இன்று திராவிடர் விடும் பெருமூச்சு மிகக் குறுகிய எதிர்காலத்தில், அந்த 'ஏக இந்தியா' மோகிகளை—அவர்கள் வீற்றிருக்கும் ஆட்சிக் கொலுவிலிருந்து தூக்கி எறியும் பேய்க்காற்றாக உருவெடுக்கத்தான் போகிறது என்பதை நாம் சொல்லிக் கொண்டிருக்கப் போவதில்லை!

## சினிமா தணிக்கை போர்டு

### தோழியர் கிருபளானி வெளியேறினர்!

புதுடில்லி, ஜூன் 8—

மத்திய சினிமா தணிக்கை போர்டிலிருந்து தோழியர் கிருபளானி தனது உறுப்பினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார்; அவரது ராஜிநாமாவை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுவிட்டனராம்.

## எழுத்தறிவின்மையை ஒழிக்க!

### சீன சர்க்கார் உத்தரவு

சீன கிராமாந்திரப் பகுதிகளில் நிலவும் எழுத்தறிவின்மையை 3 ஆண்டு முதல் 5 ஆண்டிற்குள் ஒழிக்குமாறு சீன மந்திரி சபை ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## மேற்கு ஜெர்மன் பிரதமர்

### ரஷ்யா வருமாறு அழைப்பு

மாஸ்கோ, ஜூன் 7—

மேற்கு ஜெர்மன் பிரதமர் டாக்டர் அடினூரை மாஸ்கோவிற்கு வருமாறு ரஷ்யா அழைப்பு அனுப்பியிருக்கிறது என்றும் அவரும் அவரது சர்க்கார் பிரதிநிதிகளும், விரைவில் ரஷ்யா வருவதை வரவேற்கிறோம் என்று கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

# 'படித்தவர்களில் வேலையின்மை என்பது கிடையாது'

## 'குறிப்பிட்ட வேலைகளையே கோருவதில்தான் தொல்லை'

ஈரோடு, ஜூன் 8—

"படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் என்பது, அதன் உண்மையான பொருளில் நாட்டில் நிலவவில்லை; அப்படி படித்தவர்கள் யாரேனும் வேலையில்லாதிருக்கின்றனர் என்றால் அதற்குக் காரணம், குறிப்பிட்ட வேலைகள் மட்டுமே செய்ய வேண்டும் என்ற ஆசையும், வேறு வேலைகள் மீது ஒருவகை வெறுப்புணர்வும் கொண்டவர்களாக பள்ளிப் பருவத்திலிருந்தே அவர்கள் வளர்ந்திருக்கிறதின் விளைவுதான்.

"அவர்களின் இந்த மனப்போக்கு மாற வேண்டும்; பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் இத்தகைய ஒரு எண்ணத்துடன் வளராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்,"

—என்று, சென்னை கல்வித்துறை டைரக்டர் என். டி. சுந்தரவடிவேலு, இங்குள்ள சர்க்கார் பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவிகளின் பெற்றோர் தின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் கூறினார்:—

"சர்க்கார் ஏராளமான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்க எண்ணியுள்ளனர்; ஆனால் அந்தப் பயிற்சிப் பள்ளிகளுக்கு தேவையான அளவு பட்டதாரிகள் வருவார்களா என்பது சந்தேகமே!

# 'இந்தியரும், வங்காளிகளும் வெவ்வேறு இனத்தவர்!'

## மலாயா சுகாதார அமைச்சர் கருத்து

மலாயா சர்க்கார், இந்தியர்களை வேறு இனமாகவும், வங்காளிகளை வேறு இனமாகவும் கருதுகிறது என்பதாக, அவர்கள் தந்துள்ள தகவல் மூலம் அறியக்கிடக்கிறது.

பூலான் ஜெராக் எனுமிடத்தில் உள்ள குடி புகுவோர்—குடி மாறுவோர் தங்குமிடத்தில், ஆண்டுதோறும் தங்க வைக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை இனவாரியாகக் கூறுமாறு மலாயா (மேல்) சட்டசபையில் கேட்கப்பட்டபோது, டாக்டர் லீதியாங்-சென் என்ற சுகாதார இலாகா மந்திரி எழுத்து மூலம் பதிலளிக்கையில் 'இந்தியர்கள் வேறு இனம்—வங்காளிகள் வேறு இனம்,' என்று பிரித்துப் பதிலளித்திருக்கிறார்.

அவர் தந்த பதிலில், "1954-ம் ஆண்டு தங்க வைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இந்தியர்கள் 13,336; வங்காளிகள் 1,390; சீனர்கள் 1,950; மலாயர்கள் இல்லை" என்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## குழந்தைகளின் க்ஷயரோக சிகிச்சை நிலையங்கள்

### தென்னாட்டிலும் வடநாட்டிலும் நிறுவப்படும்

மதனபள்ளி, ஜூன் 6—

குழந்தைகளின் க்ஷயரோக சிகிச்சைக்கென வட இந்தியாவில் ஒன்றும், தென்னாட்டில் ஒன்றுமாக இரண்டு சிகிச்சை நிலையங்களை இவ்வாண்டில் இந்திய சர்க்கார் திறக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

தென்னாட்டில் திறக்கப்பட இருக்கின்ற நிலையம், பெரும்பாலும் மதனபள்ளியில் உள்ள ஆரோக்கிய சானிடோரியத்தில் இருக்கும் என்றும், இங்கு, குழந்தைகளுக்கென 75 படுக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

இந்த நிலையத்திற்கான கட்டிடம், மத்திய சர்க்காரின் 5 லட்ச ரூபாய் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாம்.

அனேகமாக அடுத்து வரும் ஜூலை திங்கள் மூன்றாவது வாரத்திலேயே இம்மருத்துவ நிலையம் தனது வேலையைத் தொடங்கும் என்று கூறப்படுகிறது.

இரண்டாவது நிலையம் புதுடில்லியில் 150 படுக்கைகள் கொண்ட வசதியுடன் கட்டப்பட்டு வருகிறதாம்.

## ஓராண்டு காலத்தில் மூன்று தலைவர்கள் விலகல்

திருப்பதி நகர சபையின் ஒரு ஆண்டு காலத்திற்குள் 3 தலைவர்கள் இராஜிநாமாச் செய்திருக்கின்றனர்.

இதுவரையிலும் திருப்பதி நகர சபையின் 5-வது தலைவராக இருந்த சி. சி. இராமசாமி என்பவர் தமது இராஜிநாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார் என்று தெரிகிறது.

இவரைத் தொடர்ந்து உதவி நகரசபைத் தலைவரும் தமது பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டாராம்.

உதவி நகரசபைத் தலைவர் பதவியை இராஜிநாமாச் செய்து கொண்டவர்களில் இவர் இரண்டாவது நபர் என்று தெரிகிறது.

# சென்னை நகரசபை பள்ளிகள் நிலைமை

## கல்வி இலாகா அதிகாரி கருத்து

சென்னை நகரசபை நடத்தும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் நிலைமை குறித்து, கல்வி இலாகா அதிபர் தமது கருத்தைத் தெரிவித்துள்ளதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி ஒன்றில் காணப்படுவதாவது:—

"சென்னை நகரசபை நிர்வாகத்தில் 301 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன; 113 பள்ளிக்கூடங்களில் போதிய இடவசதி கிடையாது; 24 பள்ளிக்கூடங்களில் இடம் கொஞ்சமும் தகுதியற்றது; 61 பள்ளிக்கூடங்களில் இடம் தகுதியற்றதாயிருப்பதுடன் போதுமானதாயுமில்லை.

82 பள்ளிக்கூடங்களில், தோட்டமென்பது பெயரளவுக்குத்தான் இருக்கிறது; 136 தோட்டங்களில் தோட்டம் பராமரிக்கப்படுவதில்லை.

68 பள்ளிக்கூடங்களில் விளையாட இடம் தகுதியற்றதாயிருப்பதுடன், போதுமானதாயுமில்லை;

126 பள்ளிக்கூடங்களில் போதனா சாதனங்கள் போதுமான அளவு இல்லை. இக்குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

## சூரிய கிரகணத்தைப் படமெடுக்க!

இத்திங்கள் 20-ந் தேதியன்று நடைபெறப் போகும் சூரிய கிரகணத்தைப் படம் பிடிப்பதற்காக அமெரிக்காவிலிருந்து ஒரு நிபுணர் குழு சிலோனுக்கு வருமென அறிவிக்கப்படுகிறது.

சிலோனில் இந்தக் கிரகணம் 4 நிமிடம் 11 வினாடிகள் இருக்கும். திரிகோணமலையில் இது வர்ணப் படமாக்கப்படும்.

## ஆசிரியர் தொகையைப் பெருக்க யோசனை?

பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தொகையை மேலும் பெருக்குவதற்கென இவ்வாண்டில் புதிய ஆசிரியர் பயிற்சி பள்ளிகளை திறக்கவும், ஏற்கனவே உள்ள பயிற்சிப் பள்ளிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவும் சென்னை சர்க்கார் ஆலோசித்து வருகிறதாம்.

மேலும் ஹையர் கிரேட் பயிற்சி பெற்ற ஆசிரியர்கட்கு 3 மா காலத மறு பயிற்சி அளிக்கவும் சர்க்கார் தீர்மானித்துள்ளனராம்.

## மத்திய சர்க்காரின் சிறு—தொழில் உதவிக் கழகம்

### மதுரையில் நிறுவப்படும்

மத்திய சர்க்காரால் மதுரையில் நிறுவப்பட இருக்கும் பிராந்திய சிறு தொழில் உதவிக் கழகத்திற்கு, சென்னை சர்க்கார், மதுரையில் சுமார் ரூ 5 லட்சம் மதிப்புடைய 32.87 ஏகர் நிலத்தை இனாமாகக் கொடுத்துள்ளதெனத் தெரிகிறது.

# இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்ட பஞ்சாப் மந்திரி

## எதிர்க் கட்சியினர் மீது வழக்குத் தொடரப்போகிறாராம்!

இலஞ்சக் குற்றம் சாட்டப்பட்டு, காங்கிரஸ் மேலிடத்தால் குற்றமற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பஞ்சாப் மாநில போக்குவரத்து மந்திரி ஜெகத் நாராயணன், இப்போது, தம்மீது இலஞ்சக் குற்றம் சுமத்திய எதிர்க் கட்சியினர்மீது வழக்குத் தொடரப் போவதாக அறியக் கிடக்கிறது.

எதிர்க் கட்சியினர் சுமத்திய குற்றச்சாட்டுகளின் நகல் போன்றவையும், இதர தஸ்தாவேஜுகளும் முதன் மந்திரி மூலம் அவருக்குத் தரப்பட்டிருக்கின்றன என்றும், ஜெகத் நாராயண் இப்போது சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்துக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கல்வி வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி

திட்டக் குழுவுடன் ஆலோசனை

புதுடில்லி, ஜூன் 6—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக மத்திய சர்க்கார் கல்வி மந்திரி இலாகா தயாரித்துள்ள ரூ 1,080 கோடி கல்வி வளர்ச்சித்திட்டத்தைப் பற்றி திட்டக் குழுவின் பிரதிநிதிகளும் கல்வி மந்திரி இலாகா பிரதிநிதிகளும் கலந்தாலோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இத்திட்டத்திற்கென கல்வி இலாகா எதிர்பார்க்கின்ற செலவுத் தொகையில் பாதிக்குமேல் குழுவால் ஒதுக்க முடியாதென பேச்சு வார்த்தைகள் மூலம் யூகிக்கப்படுகிறதாம்.

இரண்டாவது திட்டத்தில் கல்வித் துறைக்கென ரூ. 500 கோடி ஒதுக்கினாலும்கூட கணிசமாக இருக்கும் என கருதப்படுகிறதாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வித் துறைக்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 158 கோடியை மனதில் கொண்டேதான் மேற்கண்டவாறு அவர்கள் கருத்துக் கொண்டுள்ளனராம்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியரின் மாதச், சம்பளம் ரூ. 50-க்கும், நடுநிலைப்பள்ளி ஆசிரியரின் மாதச் சம்பளம் ரூ 100-க்கும் குறையக் கூடாதென்று, மத்திய கல்வி இலாகா, எல்லா மாநில சர்க்கார்களின் ஒப்புதலுடன் தீர்மானித்துள்ளதாம்.

### மத்திய கல்வி இலாகா திட்டங்கள்

ரூ. 1030 கோடிக்கு மத்திய கல்வி இலாகா தயாரித்திருக்கும் திட்டங்களின் விவரம் பின்வருமாறு :—

ஆரம்பக் கல்வி வளர்ச்சிக்கு ரூ. 500 கோடி ;

நடுநிலைப்பள்ளி கல்வி வளர்ச்சிக்கு ரூ. 302 கோடி ;

தொழில் கல்விக்கு ரூ. 80 கோடி ;

பல்கலைக் கழகக் கல்விக்கு ரூ. 75 கோடி ;

சமூகக் கல்விக்கென ஒவ்வொரு பிரிவிலும் ஒரு கல்லூரியும், ஒவ்வொரு சமுதாய நலத் திட்ட வட்டத்திலும் ஒரு சமூகக் கல்வி நிலையம் ஏற்படுத்தவும், தேசீய வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் எழுத்தறிவு நிலயம் ஏற்படுத்தவுமாக ரூ. 75 கோடி.

இந்தி, சமஸ்கிருதம், சிற்பர், புராதனக் கலை ஆகியவைகட்கு ரூ. 40 கோடி.

ஆனால், திட்டக் குழு இவ்வளவு தொகையை இதற்கென ஒதுக்க இயலாதெனக் கூறுவதால், கல்வி இலாகா, இந்த மதிப்பீடுகளையெல்லாம் மாற்றி அமைக்கவேண்டி வரும் என்று கூறப்படுகிறதாம்.

---

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில், நாலா விதித மின்சார உபயோக அளவு 13 25 கிலோவாட் மணியாக இருந்தது முதலாவது திட்ட கால இறுதிக்குள்ளாக அது 21 கிலோவாட் மணியாக அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியைத் திணிக்க 'விபீஷணர்' படை!

புதுடில்லி, ஜூன் 7—

இந்தியாவில் அரசாங்கக் காரியங்களுக்கு இந்தியை உபயோகிப்பது பற்றி குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்டுள்ள இந்தி குழுவின் உறுப்பினர் பட்டியலை இந்தியப் பேரரசு அறிவித்துள்ளது. பி. ஜி கெர் தலைவராகவும், மற்றும் 20 பேர் அங்கத்தினர்களாகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

டில்லி மேல்சபை உறுப்பினர்கள் டாக்டர் பி. சுப்பராயன், எம். சத்தியநாராயணா, மக்கள் சபை உதவித் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார், எர்ணாகுளம் 'தீனபந்து' பத்திரிகையின் ஆசிரியர் எம் கே. ராஜா ஆகியோரும் மற்றும் 14 பேர்களும் நியமனம் பெற்றிருக்கின்றனர்.

இந்தக் குழு சிபாரிசு செய்ய கோரப்பட்டுள்ள பிரச்சினைகள் :—

1. இந்திய அரசாங்க விவகாரங்களுக்கு இந்தியை படிப்படியாக உபயோகிப்பது ;

2. எல்லா சர்க்கார் விஷயங்களிலுமோ, அல்லது சில விஷயங்களிலோ ஆங்கிலத்தின் உபயோகத்தைக் கட்டுப்படுத்துவது ;

3. அரசியல் சட்டத்தின் 348-வது பிரிவில் கண்டுள்ள எல்லா விஷயங்களுக்குமோ அல்லது சில குறிப்பிட்ட விஷயங்களுக்கோ உபயோகிக்கக் கூடிய மொழி ;

4. அரசாங்கத்தின் எல்லா வேலைகளுக்குமோ அல்லது குறிப்பிட்ட சில வேலைகளுக்குமோ உபயோகிக்கக்கூடிய எண்கள் ;

**5. இந்திய சர்க்காரின் அரசாங்க மொழியாகவும், மத்திய சர்க்காருக்கும்—மாநில சர்க்கார்களுக்குமிடையிலும், மாநில சர்க்கார்கள் தங்களுக்குள்ளேயும் ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைப் படிப்படியாக உபயோகிப்பதற்கான கால திட்டத்தை வகுப்பது.**

குழு, தன் சிபாரிசுகளைச் செய்யும்பொழுது, நாட்டின் தொழில், கலாச்சார, விஞ்ஞான முன்னேற்றங்களையும், உத்தியோகம் சம்மந்தமான விஷயங்களில் இந்தி பேசப்படாத பகுதிகளின் நியாயமான கோரிக்கைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று பணிக்கப்படுகிறார்கள்.

குழுவினர் தங்களுக்குத் தேவையான தகவல்களை தொடர்புடைய நிறுவனங்கள் அல்லது தனி நபர்களிடமிருந்து மனுக்கள் மூலமோ, சாட்சிகளை விசாரித்தோ, மற்ற முறைகளின் மூலமோ பெறலாம்.

குழு தனது நடைமுறைகளை, தானே வகுத்துக் கொள்ளலாம்.

1956 ஏப்ரல் 30-ந் தேதிக்கு முன் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் குழு தன் சிபாரிசுகளை குடியரசுத் தலைவரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

## இந்தியாவின் துணித் தேவை

### சில புள்ளி விவரங்கள்

**"இந்தியாவிற்கு மொத்தம் ஆண்டொன்றுக்கு 820 கோடி கெஜம் துணி தேவை ; இதில் 500 கோடி கெஜம் துணி ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் ; மேற்கொண்டு தேவைப்படும் 320 கோடி கெஜம் துணியை கைத்தறிகளும், கதர்த் துறையும் தான் ஈடுசெய்ய வேண்டியிருக்கிறது. தற்போது கைத்தறி நெசவிற்கு 35 கோடி ராத்தல் நூல் கட்டுகள் கிடைக்கின்றன ; அவற்றின் மூலம் கைத்தறிகள் 150 கோடி கெஜம் துணி உற்பத்தி செய்கின்றன. 20 கோடி கெஜம் துணி நெசவை விசைத்தறிகளுக்கென்று ஒதுக்கிவிட்டால் மிகுதியுள்ள 150 கோடி கெஜம் துணிக்கு அம்பர் கை ராட்டைகளில் கைகளால் நூற்ற நூல்களை வினியோகிக்க வேண்டும்."**

மேற்கண்டவாறு, பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில்கள் குழுவின் இரண்டாம் நாள் கூட்டத்தில் கைநெசவுத் தொழிலுக்குத் தரப்பட வேண்டிய அதிகப்படி நூல் தேவையை கை நூற்பிலிருந்து ஈடு செய்வது குறித்து நடைபெற்ற ஆலோசனையின்போது திட்டக் குழு உறுப்பினரான ஜா.வாரிபாய் படேல் என்பவர் கூறியிருக்கிறார்.

அவர் மேலும் பேசுகையில், 18 லட்சம் அம்பர் கை ராட்டைகளைப் படிப்படியாகப் பரவச் செய்வதுதான் திட்டக் குழுவின் நோக்கம் என்றும், இதற்கு ரூ. 17-கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்குமென்றும், இத்திட்டத்தின் மூலம் 35 லட்சம் பேர் வேலை பெறுவர் என்றும் கூறினர்.

மேலும் அவர், கைத்தறிக்கு வேண்டிய அதிகப்படி நூல் கட்டுகளுக்காக ஆலைகளில் கதிர்களை அதிகப்படுத்தவோ அல்லது புதிய ஆலைகளைத் துவக்கவோ கூடாது என்றும் கருத்தறிவித்திருக்கிறார்.

---

1954-ம் ஆண்டில், ஷெட்யூல்ட் சர்வீசுகளிலும், ஷெட்யூல்ட் அல்லாத சர்வீசுகளிலும் ஈடுபட்டுவந்த இந்திய விமானங்கள், மொத்தம் சுமார் 240 லட்சம் மைல்கள் பறந்து சென்றிருக்கின்றன; சுமார் 5 லட்சம் பிரயாணிகளையும், 18.1 கோடி பவுண்டு சரக்குகளையும், தபால்களையும் ஏற்றிச் சென்றிருக்கின்றன.

## ஒரே வளைக்குள் !

30 பாம்புகள் ; 60 முட்டைகள் !

அழகப்பபுரம், ஜூன் 6—

அழகப்பபுரம் வயல் வரப்பொன்றிலுள்ள ஒரு வளையில் இரு பெரிய நல்ல பாம்புகளும், 28 பாம்புக் குஞ்சுகளும், 60-க்கு மேற்பட்ட முட்டைகளும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

சமீபத்தில் இங்கிருந்து ஒருவர் நீராடச் சென்றார். நீராடிச் சென்றுவிட்டு திரும்பி வருகையில் ஒரு வயல் வரப்பிலிருந்து ஒரு பாம்பு படமெடுத்துக்கொண்டு வந்தது. பாம்பை தொந்தரவு செய்யாமல், அது எங்கு செல்கிறதென்பதைக் கவனித்துக் கொண்டிருந்தார். அது அங்கங்கே சுற்றிவிட்டு ஒரு வளைக்குள் சென்றது ; இவர் அந்த வளையை நன்றாக அடைத்துவிட்டு ஊருக்குச் சென்று, மண்வெட்டி, கம்புடன் பல ஆட்களையும் கூட்டிக்கொண்டு வந்தார்.

அடைக்கப்பட்ட வளையை வெட்டினர்—பெரிய பாம்புகள் 2 ; சிறிய பாம்புகள் 28 ; முட்டைகள் 60. இந்த 60 முட்டைகளையும் உடைத்துப்பார்த்ததில் ஒவ்வொரு முட்டையிலிருந்தும் பாம்புக் குஞ்சுகள் எழுந்து சீறி நின்றதாம்

கொஞ்ச காலமாக இந்தப் பக்கத்தில் நல்ல பாம்புகள் தொல்லை பயங்கரமாக இருந்ததாம். இப்பொழுது இந்தக் குடும்பமே தொலைந்துவிட்டதாகக் கருதப்படுகிறது.

---

1955 ஜனவரி திங்கள் முடிந்த பத்து மாத காலத்தில், மொத்தம் ரூ. 192 12 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனமுள்ளவையும், பங்குகளால் வரையறுக்கப்பட்டனவையாகவுமுள்ள 933 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன. 1953-54-ம் ஆண்டில் அதற்குச் சரியான காலத்தில், மொத்தம் ரூ 39 74 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனமுள்ள 984 கம்பெனிகள் பதிவு செய்யப்பட்டன.

## திருச்சி மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கட்டு

"**22-5-55** அன்று, திருச்சியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட தி.மு. கழகச் செயற் குழு முடிவுப்படி, நமது மாவட்ட மாநில மாநாட்டு நிதிப் பங்கு ரூ. **2,000**-ஐயும், **19—6—55**-ல் திருச்சிக்கு பொதுச்செயலாளர் அவர்கள் வரும்போது அவரிடம் கொடுக்கவேண்டியிருப்பதால், ஒவ்வொரு கிளைக் கழகத்திற்கும் விதிக்கப்பட்டுள்ள தொகையை **15-6-55**-க்குள் அனுப்பிவைக்க வேண்டுகிறேன்,"

என, திருச்சி மாவட்ட தி.மு.கழகச் செயலாளர் தோழர் அ பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

குறிப்பு : வசூல் செய்துள்ள கிளைகள் உடனடியாக அனுப்ப வேண்டுகிறேன்.

## நாகை வட்ட தி. மு. க. கிளைத் தோழர்கட்கு

"தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்கு மாவட்டச் செயலாளர் அறிக்கைப்படி சிற்றூர் கிளைக் கழகம ரூ. 10-ம், பேரூர் கிளைக் கழகம் ரூ. 25-ம், நகரக் கிளைக் கழகம் ரூ. 75-ம் குறையாமல் 18—6—55-ல் பொதுச் செயலாளர் அவர்களிடம் கும்பகோணத்தில் நிதி அளிக்கவேண்டியிருப்பதால் நாகை வட்டத்திலுள்ள கிளைக் கழகத் தோழர்கள் 15-6-55-க்குள் தங்கள் தங்கள் கோட்டாவை தவறாது 'இரா. விசயராகவன், செயலாளர், நாகை வட்ட தி. மு. கழகம், திருவாரூர்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்,"

என்று, நாகை வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. விசயராகவன் அறிவிக்கிறார்.

## அணுசக்திமூலம் பயிர் விளைச்சல்!

ஒளிக் கதிர்வீச்சு மூலம் புதுப் பயிர்களை உற்பத்தி செய்ய பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன. அமெரிக்காவையும், கனடாவையும் சேர்ந்த 75 நிறுவனங்கள் இத்திட்டத்தில் பங்கு எடுத்துக் கொள்கின்றன. புயற்காற்றினால் சேதமடையாத நெல், இயந்திரங்களை உபயோகித்து சாகுபடி செய்யக் கூடிய சோயாபீன்ஸ் ஆகியவைகளை உற்பத்தி செய்ய இப்பொழுது ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

## நோயாளியிடம் இலஞ்சம்?

திருவனந்தபுரத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 'எக்ஸ்—ரே' மருத்துவருக்கு உதவியாளர்கள் (ரேடியோ கிராபர்ஸ்) இரண்டு பேர் ஒரு நோயாளியிடமிருந்து ரூ. 3 இலஞ்சம் பெற்றுக்கொண்டதற்காக 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருக்கின்றனராம்.

வெகுதூரத்திலிருந்து வந்த நோயாளி ஒருவருக்கு 'எக்ஸ்-ரே' படம் எடுப்பதற்காக, அந்த நோயாளியிடமிருந்த ரொக்கம் ரூ 3-ஐயும் இந்த இருவரும் வாங்கிக் கொண்டதாகவும், நோயாளி 'எக்ஸ்—ரே' படம் எடுத்த பின் ஊர் திரும்பக் கையில் பணமில்லாமல் காங்கிரஸ் குழு அலுவலகத்தில் மாநில சுகாதார அமைச்சரைச் சந்தித்து நிலைமையை எடுத்துரைத்ததாகவும் தெரிய வருகிறது.

## தென் திருவாங்கூருக்கு நீர்ப்பாசன திட்டங்கள்

தென் திருவாங்கூருக்கு 2-வது திட்டத்தில் ரூ. 193 இலட்சம் செலவில் இரண்டு பெரிய நீர்ப்பாசன திட்டங்களைச் சேர்ப்பதென்று திருவனந்தபுரம் மாவட்ட அபிவிருத்திக் குழு தீர்மானித்துள்ளதாம். நெய்யாறு விரிவுபடுத்தும் திட்டம் சிட்டாறு பட்டணம் கால் திட்டம், இரண்டுமே அவை என்று கூறப்படுகிறது.

## 'போர்க்கோலம்' பூண்ட நிலப் பிரபுக்கள் சிறைக் காவலில்!

ஜெய்ப்பூர், ஜூன் 7—

ஜெய்ப்பூர் சட்டசபை முன் இன்று 112 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்களில் பெரும்பாலானோர் சிறு சிறு நிலப் பிரபுக்கள்; இவர்களை போலீசார், லாரிகளில் ஏற்றி நகருக்கு வெளியே அழைத்துச் சென்றனர்.

★

அமைச்சர் வீட்டின்முன் நிலச்சுவான்கள் கைது

98 பேர் உண்ணுவிரதம் மேற்கொண்டனராம் !

இராஜஸ்தான் மாநில உள்நாட்டு இலாகா அமைச்சர் வீட்டின் முன்னால் உட்கார்ந்துகொண்டு சத்தியாக்கிரகம் செய்த 98 நிலச்சுவான்தார்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாநில ஜாகீர் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் தங்களுக்குத் தரப்படும் நஷ்டஈடு போதாதென்றும், சிறு நிலச்சுவான்தார்கள் தங்கள் பிரதேசங்களில் தக்கபடி புனர் குடியமைப்புச் செய்யப்பட வேண்டுமென்றும் கோரிக்கொண்டே அந்த 98 நிலச்சுவான்தார்களும் உண்ணுவிரதம் மேற்கொண்டனராம் !

## டாக்டர் ஜான் மத்தாய்

அரசாங்க பாங்கி தலைவராகிறார்

பம்பாய், ஜூன் 7—

வரும் ஜூலை 1-ந் தேதி முதல் துவக்கப்படவிருக்கும் அரசாங்க பாங்கியின் மத்திய போர்டு தலைவராக இந்திய சர்க்காரின் முன்னாள் நிதி மந்திரியான டாக்டர் ஜான் மத்தாய் நியமிக்கப்பட்டிருப்பதாக இந்தியப் பேரரசு அறிவித்துள்ளது.

பம்பாய் மாநில முன்னாள் நிதி மந்திரி வைகுந்தலால் மேத்தா பாங்கியின் உதவித் தலைவராயிருப்பார்.

மத்திய போர்டில் பம்பாய் வட்டாரத்திலிருந்து 6 டைரக்டர்களும், சென்னை, வங்காள வட்டாரங்களிலிருந்து மூன்று மூன்று டைரக்டர்களும் இருப்பாராம்.

எஸ். வி இராமமூர்த்தி, ஏ. எம். எம். முருகப்ப செட்டியார், என். சத்தியநாராயணா ஆகியோர் சென்னை வட்டார மத்திய போர்டின் டைரெக்டர்களாயிருப்பர் என்றும் தெரிய வருகிறது.

மத்திய போர்டில் மொத்தம் 20 டைரக்டர்கள் இருப்பர்.

## 'கவர்னர்-ஜெனரல் மக்கள் சபையில் பேசுவது சுதந்திரத்திற்கு முரணானது'

இலங்கை எதிர்க் கட்சியினர் விளக்கம்

கொழும்பு, ஜூன் 7—

"இங்கிலாந்து அரசியின் பிரதிநிதி என்ற வகையில் கவர்னர்-ஜெனரல் இலங்கை மக்கள் சபையில் பேசுவது, இலங்கையின் சுதந்திர 'அந்தஸ்தி'ற்கு முரணானது,"

எனக் கூறி, கம்யூனிஸ்டு, சமசமாஜி கட்சியினர், மக்கள் சபையின் நான்காவது கூட்டத்தைக் கவர்னர்-ஜெனரல் துவக்கிவைக்கும் விழாவில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது.

## காசாவில் இஸ்ரேல் போர் தொடங்குமா?

"எகிப்தின் கைவசமுள்ள காசா பகுதியில் இஸ்ரேல் போர் தொடங்கினால் ஈராக் உட்பட எல்லா அரபு நாடுகளும் எகிப்தின் பக்கம் சேர்ந்து போராடும்," என்று கெய்ரோ பத்திரிகை ஒன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

பேச்சு நடத்த இஸ்ரேல் தயாராம்

காசா எல்லையில் நெருக்கடியைத் தணிப்பது பற்றி எகிப்துடன் பேச்சு நடத்த இஸ்ரேல் தயாராயிருப்பதாக, இஸ்ரேலி பிரதமர் ஐ. நா. போர் நிறுத்த மேற்பார்வையாளரிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

# 'நிர்வாக முறையை மாற்றியமைக்க விவசாயிகள் போராட வேண்டும்'

## குஜராத் விவசாய மாநாட்டில் பேச்சு

பரோடா, ஜூன் 8 -

"ஆலைப் பொருள்களுக்கும், விவசாயப் பொருள்களுக்கும் இடையே உள்ள விலை வேறுபாடுகளை ஒழித்து இரண்டிற்கும் ஒரு சமநிலை ஏற்படச் செய்ய வேண்டுமென அரசாங்கத்தைத் தூண்டுவதற்கு விவசாயிகள் கிளர்ச்சி செய்ய வேண்டும்;

"விவசாயப் பொருள்களின் விலை வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததினால் கிராம மக்களின் முன்னேற்றம் தடைபட்டதுடன், விவசாயிகளின் பொருளாதார நிலை நாளுக்கு நாள் சீரழிந்து வருகிறது"

—என்று, குஜராத் கிசான் பஞ்சாயத்து முதல் மாநாட்டைத் துவக்கி வைத்த டாக்டர் அமல் தேசாய் என்ற பம்பாய் சட்டசபை ம. சோ. கட்சி உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய பலேஷ்வர் தயால் என்பவர், தமது தலைமையுரையில்,

"இப்போதிருக்கிற நிர்வாக முறையை மாற்றியமைக்க வேண்டும் என்றும், மாற்றியமைக்கப்படும் நிர்வாக முறையில் கிராம மக்களே தங்களின் எஜமானர்களாக இருப்பர்—தங்கள் அறிவுக்கொப்ப, தங்கள் எதிர்காலத்தை தாங்களே உருவாக்கிக் கொள்ள முடியும் என்றும் அத்தகைய மாற்றத்திற்காகக் கிராம மக்கள் போராட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

"இப்போதுள்ள நிர்வாக முறைப்படி மத்திய ஆட்சியாலும், மாநில ஆட்சியாலும் வகுக்கப்படும் கொள்கைகளும், நிறைவேற்றப்படும் சட்டங்களும், கிராமங்களில் வாழும் மக்களுடன் எப்போதும் தொடர்பேதுமின்றி நின்று வரும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டில், ஒரு தனிப்பட்டவர் தனது குடும்பத்திற்கும் சேர்த்து அதிகபட்சமாக 30 ஏகர் நிலமும், குறைந்த பட்சம் 5 ஏகர் நிலமும் கொண்டிருக்கலாம் எனச் சட்டம் இயற்றக் கோரி தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

### இரயிலைக் கவிழ்த்த புயற்காற்று

நாகபுரி, ஜூன் 8—

நாகபுரியிலிருந்து சுமார் 20 - கல் தொலைவில் உள்ள மாருடு என்னுமிடத்தில், கடுமையாக வீசிய புயற்காற்றின் காரணமாகப் பிரயாணிகள் இரயில் வண்டி ஒன்று தடம் புரண்டு கவிழ்ந்து விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த இரயில் விபத்தில், அவ்வண்டியில் பிரயாணம் செய்தவர்களில் 21 பேருக்குக் காயம் பட்டதாகவும், அவர்களில் நாலவருக்குப் படுகாயம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

### பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 7—

இந்தியா—இலங்கை அதிகாரிகளின் பேச்சுவார்த்தைகள் இத்திங்கள் 13-ந் தேதியன்று ஆரம்பமாகலாமென அறியவருகிறது.

டில்லி ஒப்பந்த அமுலில் ஏற்பட்டுள்ள சில சிக்கல்களை விவாதித்துத் தீர்க்கவே இந்தப் பேச்சுவார்த்தைகள் என்று கூறப்படுகிறது.

### கழகக் கூட்டம்

★

வையப்பட்டி (திருச்சி)
காந்தி சதுக்கத்தில்
11—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: சையது இப்ராகிம்
பேசுவோர்:
சத்தியவாணிமுத்து
மீ. சு. இளமுருகு-பொற்செல்வி
ந. சண்முகம்
ரா. நடராசன்
மா. மாரியப்பன்

### சொற் பயிற்சிக் கூட்டம்

11—6—55 மாலை 6 மணிக்கு சென்னை 46-வது வட்ட தி. மு. கழக இல்லத்தில், 'நாடு தந்த நல்லவர்கள்' என்னும் பொருள்பற்றி தோழர் அ. செல்வராசன் தலைமையில் தோழர்கள் பலர் பேசுவர்.

# இலங்கையின் ஆட்சிமொழி

## சிங்களம் போன்றே, தமிழும் இடம் பெறும்

### இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை உறுதி செய்கிறார்

"இலங்கைத் தீவின் ஆட்சி மொழிகளாக தமிழ், சிங்களம் இரண்டையும் ஏற்றுக்கொள்வது என்பதே இப்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை,"

என்று, பிரதமர் கொத்தலாவலை கட்சியின் மக்கள் சபை உறுப்பினர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"சிங்களத்தையும், தமிழையும் ஒன்றாக மதித்து நடக்கும் அரசாங்கத்தின் திடமான கொள்கைக்கு எதிரான எந்த ஒரு தீர்மானத்தின் சிபாரிசுகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஐ. எம். ஆர். இரியகோலா என்பவர், 'சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்,' என்று கொண்டு வந்த தீர்மானத்தின் மீது பேசுகையிலேயே பிரதமர் கொத்தலாவலை மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

### அமுலுக்கு வருகிறது!

சென்னை மாநிலத்திலுள்ள விவசாய நிலங்கள் சம்மந்தமான விஷயத்தில் 1956 ஏப்ரல் திங்கள் 2-ந் தேதி முதல் மரண வரிச் சட்டம் அமுலுக்கு வருமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### 42 கம்பெனிகளுக்கு மூலதன அனுமதி

புதுடில்லி, ஜூன் 7—

இந்தியப் பேரரசு 1954 டிசம்பருடன் முடிவடைந்த மூன்று மாத காலத்தில் நாட்டில் உள்ள கூட்டு மூலதனக் கம்பெனிகளிடமிருந்து கிடைத்த 42 மனுக்கள் விஷயத்தில் மொத்தம் சுமார் ரூ. 21.49 - கோடி மூலதன வெளியீட்டுக்கு அனுமதி தந்தனர் எனத் தெரிகிறது.

# அகதிகளுக்கு வேலை தர!

## 25,000 கதிர்கள் கொண்ட நூற்பு ஆலை!

### 30 லட்சம் ரூபாய் கடன்தர டில்லி சம்மதம்

இடம் பெயர்ந்த 'அகதி'களுக்கு வேலை தருவதற்காக நாடியா மாவட்டத்தில் உள்ள கேயஸ்பூர் என்னுமிடத்தில் 25,000 கதிர்களுடன் இயங்கும் நூற்பு ஆலை ஒன்று நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக, மாநில அரசாங்கத்திற்கு, மத்திய அரசாங்க அகதி புனரமைப்பு இலாகா மந்திரி சபை ரூ. 30 லட்சம் கடன் வழங்கும் என்று தெரியவருகிறது.

துவக்கத்தில் 400 அகதிகள் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்படுவர் என்றும், ஆலை முழு உற்பத்தியில் ஈடுபடும்போது சுமார் 1,500 அகதிகளுக்கு வேலை கிடைக்குமென்றும் கூறப்படுகிறது.

அகதிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகத் திட்டப்பட்டுள்ள எண்ணற்ற திட்டங்களில் இது ஒன்று.

# 'பத்ரிநாத்' நாராயணனுக்கு!

### ரூ. 4 இலட்சம் பெறுமான தங்கக் கிரீடம்!

தென்னிந்திய பக்தர்களின் 'நன்கொடை'யைக் கொண்டு சென்னையிலுள்ள பத்ரிநாத் ஸ்ரீ அரிநாராயண பெருமானுக்காக, முழுவதும் 'அபரஞ்சித் தங்க'த்தால் செய்யப்பட்டு, நவமணிகளால் பதிக்கப்பட்ட தங்கக் கிரீடம் ஒன்று சென்னையில் தயாரிக்கப்பட்டுள்ளதாம்!

இந்தக் கிரீடத்தின் எடை 500 தோலா என்றும், மொத்த மதிப்பு ரூ 4 இலட்சம் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கிரீடத்தைத் தயாரிப்பதற்கு மட்டும் ரூ. 15,000 கூலி கொடுக்கப்பட்டதாம்.

இக்கிரீடத்தின் உயரம் 18 அங்குலம்; இதில் 2,500 'நவமணிகள்' பதிக்கப் பெற்றுள்ளனவாம். இவை தவிர, 'நவக்கிரகங்'களும், நடுவில் 'கொண்டை'யாக ஒரு வைரமும் பதிக்கப்பட்டிருக்கிறதாம்!

சேடயம் போன்ற தோற்றம் கொண்ட இந்தக் கிரீடத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் 30,000 ரூபாய் பெறுமான 10 'காரட்' வைரத்தை விஜயநகர மகாராணி அன்பளிப்பாகத் தந்துள்ளாராம்.

சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர், திருப்பதியிலுள்ள வெங்கடேசுவர சாமிக்கு ரூ. 20 இலட்சம் செலவில் ஒரு கிரீடம் செய்யப்பட்டு அணிவிக்கப்பட்டது இங்கு நினைப்பிடத் தகுந்தது.

### வேலையிழந்த மோட்டார் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

மோட்டார் அண்ட் மெட்டல் கார்ப்பரேஷனில் வேலை செய்து, பின்னர் வேலை இழந்து விட்ட 200 - தொழிலாளர்கள், தங்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வற்புறுத்தி 7-ந் தேதியன்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

# வேலை நிறுத்தத்தைக் கைவிட்ட தொழிலாளர்கள்

### பெண் தொண்டர்களால் பரிகசிக்கப்படுகின்றனராம்!

கான்பூர், ஜூன் 7—

வேலை நிறுத்தத்தை கைவிட்டு, வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களை அலைக்கழித்துத் தொந்தரவு செய்ததாக ஆலைத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 34 பெண் தொண்டர்களை போலீசார் கைது செய்துள்ளனர் என்று தெரிகிறது.

எல்ஜின் ஆலை முன்பு சுமார் 100-க்கும் அதிகமான பெண் தொண்டர்கள் கூடி நின்றுகொண்டு, முதல் 'ஷிப்டு' வேலை முடிந்துத் திரும்பிய—வேலை நிறுத்தத்தைக் கைவிட்ட தொழிலாளர்களைக் கேலி செய்து கொட்டமடித்தனராம்.

ஏராளமான போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவாம்.

சில பெண்கள், வேலையிலிருந்து திரும்பிய அந்த தொழிலாளர்களை பின்னாலேயே துரத்திச் சென்று, சந்து பொந்துகளிலெல்லாம் நுழைந்து, கண்ணாடி வளையல்களை அந்தத் தொழிலாளர்களுக்குக் காட்டி, அவற்றை அவர்கள் அணிவதற்குத் தருவதாகக் கூறி கேலியும் கிண்டலும் செய்தனராம்.

### சிறையில் நிறைய..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழும் சீக்கியரின் ஆதரவு கிடையாது,"

என்று தனக்குத்தானே சமாதானம் பேசிக்கொண்டாராம்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"பிரச்சினை, சட்டத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதுதான் என்றிருக்கும்போது, அகாலிதளத் தலைமை, பிரச்சினையை வேறு பக்கம் திருப்ப முனைவதாகத் தெரிகிறது; சீக்கிய மத நிறுவனங்களான குருத்துவாராக்களை சர்க்கார் ஆதிக்கம் செய்ய விரும்புவதாகவும், சீக்கியர்களை நசுக்கும் சர்க்கார் நடத்துவதாகவும் அவர்கள் கூறுகின்றனர்; மேலும் சீக்கியர்களின் பலதரப்பட்ட குறைகளையும், சமூகத்தை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளையும் ஒதுக்கி, குழப்புகின்றனர் அகாலிதளத்தவர்,"

அவர் மேலும் சொன்னார்:—

"சர்க்கார், சீக்கியர்களை பாகுபாடு செய்து நடத்துவதாகக் கூறுவதை நான் ஏற்க முடியாது இங்கு எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் உண்டு."

குருத்துவாரா விஷயங்களில் தலையிடுவதாகக் கூறுவதைக் குறிப்பிட்டு பீம்சேன் சச்சார் சொன்னார்:—

"சீக்கியர்கள் விரும்பினால், குருத்துவாரா சட்டத்தையே ரத்து செய்துவிட சர்க்கார் தயாராயிருக்கிறது.

"அகாலி தளத்தவர் மே 10-ம் நாளே போராட்டம் துவங்க குறிப்பிட்டதற்குக் காரணம், இந்த நாளில்தான் 1857-ம் ஆண்டு சிப்பாய்க் கலகம் துவங்கியது," என்றும் அவர் தெரிவித்தாராம்.

### மிளகாய் ஏற்றுமதி அளவு கூடுதலாகிறது

மிளகாய் சம்மந்தமான ஏற்றுமதிக் கொள்கையைப் பரிசீலனை செய்திருந்த இந்திய சர்க்கார், பம்பாய், சௌராஷ்டிரா, பஞ்சாப், ஹைதராபாத் ஆகிய மாநிலங்களிலிருந்து கூடுதலான அளவு மிளகாயை தற்போது ஏற்றுமதி செய்ய அனுமதி தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### திருவள்ளுவர் திருநாள் ஒத்திவைப்பு

புதுக்கோட்டை திருவள்ளுவர் கழகத்தில், 12—6—56-ல் நடக்க இருந்த 'திருவள்ளுவர் திருநாள்' சில காரணங்களை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

# சோவியத் நாட்டில் பண்டிதரின் அலுவல்கள்

## உரையாடல்களும், பார்வையிடலும்

மாஸ்கோ வந்தடைந்த இந்தியப் பிரதமர் நேரு பண்டிதருக்கும், சோவியத் ரஷ்யப் பிரதமர் புல்கானினுக்குமிடையே கிரெம்லினில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின என்று செய்திகள் அறிவிக்கின்றன. அவர்கள் இருவரும் சுமார் 90 நிமிட நேரம் வரையிலும் உரையாடினர் எனவும், அவர்களது பேச்சு வார்த்தைகளின் போது இந்தியத் தூதுவர் கே. பி. எஸ். மேனன் மட்டும் உடனிருந்தார் எனவும் கூறப்படுகின்றது.

நேரு, சோவியத் சர்க்கார் அயல் நாட்டமைச்சர் மாலடோவையும் சந்தித்து அவருடன் ஒரு மணி நேரம் உரையாடினார் எனவும் தெரிகிறது.

இரு பிரதமர்களின் பேச்சுவார்த்தையும் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு நீடிக்குமென கூறப்படுகிறது.

இந்திய—சோவியத் பிரதமர்கள் இருவரும், சோவியத் சர்க்கார் அயல் நாட்டு விவகார உதவி அமைச்சருடன், ஒரு திறந்த காரில் கிரெம்லின் பொருட்காட்சிச் சாலையை சுற்றிப்பார்த்தனராம்.

கிரெம்லின் பொருட்காட்சிச் சாலையில் ஜார் மன்னரின் ஆட்சிக் காலத்திய சின்னங்கள் பல வைக்கப்பட்டுள்ளனவாம். உலக ஏழு அதிசயங்களில் ஒன்றான 2500 டன் எடையுள்ள 'கண்டாமணி'யும் அங்கிருக்கிறது. இந்த மணி 16-வது நூற்றாண்டில் செய்யப்பட்டதாகும். இந்த மணி அடிக்கப்படுவதினால் எழும்பும் ஓசை மாஸ்கோ நகர் முழுமையிலும் கேட்குமாம்.

முன்னர் ஒரு முறை இம்மணியை உயரமான ஒரு இடத்தில் தூக்கிவைக்க முயற்சித்தபோது தவறி கீழே விழுந்ததின் காரணமாக அதன் ஒரு பக்கம் சிறிது உடைந்துள்ளதாம்.

### லெனின், ஸ்டாலின் சமாதி

லெனின், ஸ்டாலின் சமாதிகளை பிரதமர் நேருவும், அவரது மகள் இந்திரா காந்தியும் பார்வையிட்டனராம். இங்கு லெனின், ஸ்டாலின் ஆகிய இரு தலைவர்களின் சடலமும், பல்லாண்டு காலத்திற்கு அப்படியே இருக்கும் வகையில் பக்குவப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டுள்ளனவாம். லெனின் மரணமடைந்து 32 ஆண்டுகளாகியும் இன்னும் அவரது உடல் பார்த்தால் பிரமிக்கும் அளவிற்கு அன்றிருந்ததுபோலவே இருக்கிறதாம்.

சோவியத் யூனியனிலேயே உள்ள மிகப்பெரிய மோட்டார் தொழிற்சாலையான ஸ்டாலின் மோட்டார் தொழிற்சாலைக்கு நேரு சென்று பார்வையிட்டுள்ளார்.

### தொழில் அனுசக்தி நிலையம்

ரஷ்யாவில், தமது சுற்றுப் பயணத்தின் போது, நேரு, சோவியத் யூனியன் தொழில் அனுசக்தி நிலையத்தையும் பார்வையிடுவார் என்று தெரிகிறது. இந்த நிலையம்தான் உலகிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட தொழில் அனுசக்தி நிலையமாம்.

மேலும், இந்த நிலையத்தை கம்யூனிஸ்டல்லாத பிரமுகர் ஒருவர் பார்வையிடுவது இதுவே முதல் முறை என்றும் கூறப்படுகிறது.